## திருப்பத்தூர் மாவட்ட சுகாதார அலுவலரின் செயல் முறை ஆணை

**பிறப்பிப்பவர்: மரு. சு.சித்ரசேனா, எம்பிபிஎஸ்., டிஜிஒ., எம்.டி.,**

ந.க.எண்.6433/இ5/2023 நாள்.22/08/2024

பொருள்: பணியமைப்பு – பொது சுகாதாரம் – திருப்பத்தூர் மாவட்ட சுகாதார அலுவலகம் – திரு.R.ஆறுமுகம், இளநிலை உதவியாளர், பச்சூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையம் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. 15.03.2024 நாளிட்ட பச்சூர் ஆரம்ப சுகாதார நிலைய வட்டார மருத்துவ அலுவலரின் கடித ந.க.எண்.420/அ3/2024.
2. அரசு ஆணை எண்.104, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை, நாள். 21.05.2003.
3. 22.09.2023 நாளிட்ட சென்னை–06, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் செயல் முறை ஆணைந.க.எண். 5593373/பநோ.4/எஸ்.4/2023–111.
4. 29.09.2023 நாளிட்ட இவ்வலுவலக கடித ந.க.எண்.6433/அ3/2023.
5. 27.02.2024 நாளிட்ட வேலூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் கடித ந.க.எண். 000651/அ2/2024.
6. 01.07.2024 நாளிட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், வேலம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தொடக்கப்பள்ளி கடித ந.க.எண். 001/அ1/2024.
7. 03.07.2024 நாளிட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், வேலம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கடித ந.க.எண்.64/2024.
8. 16.07.2024 நாளிட்ட கிருஷ்ணகிரி மாவட்டம் கத்தாலமேடு DES மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கடித ந.க.எண்.9/2024.

..............

**ஆணை:**

பார்வை 3–ல் காணும் ஆணையின்படி, திரு.R.ஆறுமுகம், என்பவர் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 4–ல் காணும் கடிதத்தின்படி பச்சூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியமர்த்தப்பட்டு 29.09.2023 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

பார்வை 2–ல் காணும் அரசு ஆணையில் வழங்கப்பட்ட அதிகாரப் பகிர்வின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு திருப்பத்தூர் சுகாதார மாவட்டம் பச்சூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்தில் 29.09.2023 அன்று இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு.R.ஆறுமுகம் என்பவருக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 உட்பிரிவு 28(1)–ன்படி இளநிலை உதவியாளர் பதவியில் 29.09.2023 முற்பகல் முதல் பணிவரன்முறைபடுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

இவ்வாணை மாண்புமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தொகுதி–IV–ல் நேரடி நியமன பணிகள் தொடர்பாக தொடரப்பட்டுள்ள வழக்குகளின் தீர்ப்பாணைகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையின் அடிப்படையில் ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

இவர் 29.09.2023 முற்பகல் முதல் மூன்றாண்டு தொடர் பணி காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தை நிறைவு செய்யவும், தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

இவ்விவரங்கள் உரியவரின் பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளன எனச் சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட சுகாதார அலுவலர்,
திருப்பத்தூர்.

**பெறுநர்:**
திரு.R.ஆறுமுகம், இளநிலை உதவியாளர், ஆரம்ப சுகாதார நிலையம். பச்சூர்
**நகல்:**
பணிப்பதிவேட்டிற்கு.
1. உபரி.
கு.ச/30.07.2024